முருகப்பெருமான் துணை

**மகான் மாணிக்கவாசகர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.08.2023**, திங்கட்கிழமை

1. தருமனாக வந்த அரங்கனே
தரணிக்கு தருமபாதை வழி
பெருமை சேர்க்க வேண்டி
பிரணவக் குடில் படைத்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிபட சோபகிருது நள்ளி திங்கள்
அறிவிக்க இருபான்நவ திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 29 ம் நாள், 14.08.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் மாணிக்கவாசகர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமின்றி மீட்க உண்டான
சுத்த நெறிபட அன்னதான சேவை
4. சேவை வளர்க்கும் அரங்கனே
செகத்தை மாற்றவந்த ஞானி
அவனியோர் அரங்கன் வழிகளை
அவசியம் ஏற்று நடக்கவே
5. நடக்கவே தருமபலம் கூடி
நான் என்ற அகந்தை ஓடி
இடரில்லா நற்குணங்கள்பட
இலகுவாய் சேவை ஆற்றி உயரநேரும்
6. நேருமை கொண்டு நன்கு
நீதிபட வாழக் கற்றுத் தரும்
தருமவான் அரங்கன் நெறி
தரணியெங்கிலும் தழைக்க வேண்டி

7. வேண்டியே சேவை ஆற்றிட
வேலவன் வழிபாடு செய்யும்
தொண்டுள்ளம் பெருகி
தொடர் வழிபாடு செய்து
8. செய்துமே ஞானிகள் ஆசிபட
செப்பிடுவேன் வேலவன் காட்சி
மெய் ஞானமாகக் கிட்டி
மேலவர்கள் போற்றும் வண்ணம்
9. வண்ணமுடன் தேறி இனிதே
வருங்கால ஞானிகளாவர்
அண்ணல் அரங்கன் அவதார
அற்புதம் நோக்கம் அறிந்து
10. அறிந்து உயர் சேவை ஆற்றி
அகிலத்தில் மாற்றம் புரிவர்
அறிந்தும் அறியாமலும் மக்கள் செய்த
அனைத்துப் பிழைகளும் விலகி
11. விலகியே உலகமக்களெல்லாம்
வேலவன் வழிகாட்ட ஞானிகள் ஆக
உலகினில் மாற்றம் செய்வர்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—